அக்டோபர் அரசியல் அதிர்ச்சிகள்!

திராவிடநாடு

மலர் 11 | 12–4 53 | இதழ் 41

விலை 2 அணா

ஆச்சாரியார் ஆட்சி அகலுமாம்

பூஜ்யர் ஆட்சியின் பூஜ்யபலன்

காமராஜர் 'வேலை' ஆரம்பமாம்

அக்டோபர் பிறக்கட்டும், அரசியலில் ஏற்படப் போகும் அதிர்ச்சிகள் தெரியும் அப்போது, என்று அரசியல் வட்டாரத்திலே பேச்சு கிளம்பிவிட்டது. பேச்சு வளர்ந்த வண்ணமும் இருக்கிறது.

ஆந்திர மாகாணம் அக்டோபரில் அமைகிறது—அதன் விளைவாக, சென்னை அரசியலில், எதிர்பாராத மாற்றங்கள் பல ஏற்படப்போகின்றன, என்று, சட்டசபை உறுப்பினர்களே பேசத் தொடங்கிவிட்டனர்—சட்டசபைக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி.

அனேகமாக ஆச்சாரியார் ஆட்சி அகற்றப்பட்டுவிடும் என்ற பேச்சே அதிகமாகக் கேட்கப்படுகிறது. ஆச்சாரியார் எவ்வளவு எதிர்பாராத நிலையிலே உள்ளே நுழைந்தாரோ, அதுபோலவே, வெளியேற்றப்படுவார் என்றும், அதற்கான 'முஸ்தீபுகள்' மும்முரமாக நடைபெறுவதாகவும், கூறப்படுகிறது. மேல்சபைக்கு இப்போது, மாஜி மந்திரி பக்தவத்சலம் உறுப்பினராக்கப்பட்டிருப்பதற்கும், அக்டோபரில் நேரிட இருக்கிற அரசியல் அதிர்ச்சிக்கும் அர்த்தமுள்ள தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. பொதுமக்களால் தோற்கடிக்கப்பட்ட பக்தவத்சலம், பாரததேவியின் சேவையிலும், பாரத சேவா சமாஜச் சேவையிலும் ஈடுபட்டிருந்தவர், இப்போது, மீண்டும், கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது வீண் வேலையல்ல, என்பது எவரும் எண்ணிப் பார்க்கவேண்டிய விஷயம்தான். சென்னையில் சில திங்களுக்குமுன்னம் நடைபெற்ற தமிழர் மாநாட்டிலே, தோழர் பக்தவத்சலம் அரசியலுக்குத் தேவையில்லாதவர், அதிலும் மந்திரி வேலைக்குத் துளியும் தேவையில்லாதவர், என்ற கருத்தை, ஆச்சாரியார், அவருக்கே உரித்தான 'பாணியில்' பேசியதை இதற்குள் யாரும் மறந்துவிட்டிருக்க மாட்டார்கள். தோழர் பக்தவத்சலம், தமிழின் அருமை பெருமைகளைப்பற்றி அழகுறப் பேசினது கேட்ட ஆச்சாரியார், பக்தவத்சலத்தைப் பாராட்டுவதுபோல தமது கருத்தை வெளியிட்டார். இவ்வளவு அழகாகத் தமிழுக்குத் தொண்டாற்றும் பக்தவத்சலம், ஏன் தான் அரசியலில் மந்திரியாக இருந்து தன் திறமையைவீணாக்கிக்கொண்டு வந்தாரோ தெரியவில்லை என்று பேசினார். "ஐயா! பக்தவத்சலம்! இப்போது செய்வதுபோல, உனக்குத் தோன்றியபடி தமிழின் சுவைபற்றிப் பேசிக்கொண்டிரு—அதற்குத் தகுந்த ஆசாமிதான் நீ—ஆனால், அரசியலில் நுழையவேண்டாம்" என்று பச்சையாகக் கூறுவதற்குப் பதிலாக, பஜகோவிந்த பாணியிலே ஆச்சாரியார் பேசினார். பக்தவத்சலமும் சிரமப்பட்டுப் புன்னகை புரிந்தார் — ஆச்சாரியாரின் நோக்கத்தையும் புரிந்துகொண்டுவிட்டார்.

காந்தியத் தத்துவத்தின்படி கிராமங்களைச் 'சேவா பீடங்களாக' மாற்றி அமைக்கும் திருத்தொண்டு பக்தவத்சலனரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் தொண்டுடன், 'பாரத தேவி'யை நிர்வகிக்கும் தொண்டும், இணைந்திருந்தது. இவ்வளவு 'வேலை'யைத் தோளின்மீது போட்டுக்கொண்டவர், இப்போது, மேல்சபை உறுப்பினராக நுழையவேண்டிய காரணம் என்ன? ஏன் அந்த வாய்ப்பு, சென்னை மேயர் தோழர் செங்கல்வராயனுக்குத் தரப்படவில்லை? வேறு பல, பழுத்த காங்கிரசாரும் உள்ளனரே,—பக்தவத்சலனைத் தேடிப் பிடித்துவந்த மர்மம் என்ன என்ற கேள்வி, எங்கும் எழத்தானே செய்யும்?

ஆச்சாரியார், பக்தவத்சலனிடம் ஒரு மந்திரி இலாகாவைப் புதிதாகச் சமைத்து, அளிக்க விரும்புகிறாராம்—ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமான காரியங்களைக் கவனித்துக்கொள்ளும் அமைச்சராக பக்தவத்சலத்தை நியமித்துவிட்டால், அரசியல் அதிர்ச்சி தடுக்கப்பட்டுவிடக்கூடும் என்பது ஆச்சாரியாரின் எண்ணம். ஆனால், அவர் ஒன்று எண்ண, காமராஜர் வேறொன்று எண்ணுகிறாராம்! காமராஜர் முடிவு கட்டிவிட்டால், ஆச்சாரியார் ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, திருக்குற்றாலம் சென்று, ரசிகமணியுடன் உரையாடிச் சுவைபெறுவதன்றி வேறு என்ன செய்யமுடியும். இதனைக் கூறுமற் கூறும் விதமாகவே சென்ற கிழமை சென்னையில் தென்னாட்டுப் பட்டேல் காமராஜருக்கு ஐம்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடினர்.

ஆச்சாரியார், உள்ளே நுழைந்தார்—காமராஜர் வெளியே சென்றார்—என்று பேசப்பட்டது—முன்பு. ஆச்சாரியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோதே, காமராஜர் ஆதிக்கம் தன்னைப் பொறுத்தமட்டிலும், தலைகாட்டக்கூடாது என்று கேட்டுக்கொண்டாராம். அது உண்மை என்று எண்ணும்விதமாகவே ஆச்சாரியார், பல மாவட்டத் தலைநகர்களிலே பவனி வந்து, தனது 'ஆத்மார்த்த சினேகிதரை' பிடித்திழுத்துப் பீடத்திலமர்த்திச் சோடசோபசாரம் செய்தார்—பதில் மரியாதைக்காக அவர்களும் ஆச்சாரியாரைச் சுற்றிநின்று பஜனை செய்தார்கள். விருதுநகர் வீரரோ வெப்பமிகுந்த டில்லியில் வெதும்பிக் கிடந்தார். வெற்றி வீரரான ஆச்சாரியார், பரம பக்தரான டாக்டர் சுப்பராயனைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகக் கொண்டு, 'ராஜ்ய பாரத்தை'த் தொடங்கினார்.

ஆச்சாரியாருடையஆட்சி ஆரம்பமானபோது, அவருடைய பேச்சிலே, முக்கியமான பகுதி காங்கிரஸ் கெட்டுக் கிடக்கிறது — ஊழல் மலிந்து கிடக்கிறது—நிர்வாகத்திலே காங்கிரசார் தலையிட்டுக் கெடுத்து வைத்திருக்கிறார்கள்—சுயநலம், பதவி மோகம் எனும் பீடைகள் நிரம்பிக் கிடக்கின்றன — அவைகளை ஒழித்தாக வேண்டும்—அதுவே என் பணி-என்பதுதான் என்பதை அனைவரும் அறிவர்.

இரண்டு நோக்கங்களுடன், இந்த விதமாகப் பேசினார்.

காங்கிரசை எதிர்ப்பவர்கள், எதிர்த்து வெற்றிபெற்று, சட்டசபை உறுப்பினர்களானவர்கள், ஆச்சாரியார், காங்கிரசையே கண்டிக்கிறார், எனவே, இது காங்கிரசாட்சி அல்ல, ஆச்சாரியார் ஆட்சி, காங்கிரசின் போக்கையும், முன்னாள் ஊழலையும் ஒழித்துக் கட்டும் உத்தமரின் ஆட்சி, எனவே, இதனை நாம் ஆதரிக்கவேண்டும் என்று எண்ணுவார்கள், என்பது ஆச்சாரியாருடைய நோக்கங்களிலே ஒன்று.

விளைவும் அந்தவிதமாக நேரிட்டது.

காங்கிரசாட்சியைத் தடுத்து, நாட்டிலே ஒரு ஜனநாயக முற்போக்கு ஆட்சியை ஏற்படுத்துவதற்கு இருந்த வாய்ப்பைப் பாழ்படுத்திவிட்டார்.

ஆச்சாரியாருடைய மற்றொரு நோக்கம், காங்கிரசின்பேரால் முன்பு ஆட்சி செய்தவர்கள், திறமைக் குறைவாலும், ஊழல் போக்கினாலும் நாட்டையும்கெடுத்துவிட்டார்கள், காங்கிரசின் செல்வாக்கையும் சிதைத்துவிட்டார்கள், என்ற முடிவுக்குக் காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் அன்பர்கள், வரவேண்டும் என்பதாகும். சுருக்கமாகக் கூறுவதானால், காமராஜரின் போக்கைக் கண்டிப்பதாகும்.

இதனால், ஏற்படும் என்று ஆச்சாரியார் எதிர்பார்த்த விளைவு, ஏற்படவில்லை.

காமராஜரிடம்; காங்கிரசார் கடுங்கோபம் கொண்டு விரட்டி விடுவார்கள்—காங்கிரஸ் தன் ஆதிக்கத்தின் கீழ் வந்துசேரும்-யாரேனும் ஒரு தாசரைப்பிடித்துத் தலைவனாக்கிவிட்டு "ராஜ்ய பாரத்தை" நடத்திச் செல்லலாம் என்று எண்ணினார். அந்த எண்ணத்திலே, மண் விழத் தொடங்கிவிட்டது. மீண்டும் காமராஜர்,காங்கிரசுக்குத் தலைவராகி விட்டார். மௌனியாக இல்லை, பேசுகிறார்! ஆச்சாரியார் புகழ் பாடுவதில்லை!!

காங்கிரசிலே சுயநலம் முளைத்துக் கெடுத்துவிட்டது என்றும், முன்னாலே ஆட்சி செய்தவர்கள் பல தவறுகளைச் செய்தார்கள், என்றும், ஆச்சாரியார் கூறித் திரிந்தது, உண்மையில் [illegible] கடுகளவு ரோஷ உணர்ச்சி உடைய காங்கிரசாருக்கு-குறிப்பாக, காமராஜரைத் தென்னாட்டுப் பட்டேல் என்று போற்றும் கூட்டத்தாருக்கு, பெருத்த எரிச்சலையும், அவமானத்தையும் தரத்தானே செய்யும். பொதுமக்களிடம், குறிப்பாக, காங்கிரசின் எதிரிகள் முன்பு, காங்கிரசையும் அதன் முன்னாள் நிர்வாகிகளையும் 'காட்டிக் கொடுக்கும்' கொடிய செயலாகவே, ஆச்சாரியார் பேச்சைக் கருதினர். மனம் மாரண்டது, எனினும் வாய்திறக்கவில்லை ஏனெனில் ஆச்சாரியாரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அவர் மாணிக்கவேலர்களைத் 'தத்து' எடுத்து, பி. டி. ராஜன்களைப் 'பிரியசினேகிதர்'களாகக் கொண்டு, உழைப்பாளர் கட்சியின் உன்னதத் தன்மையை உடைத்துத் தள்ளி, எதிர்க் கட்சியை இளைக்கவைத்தார். எனவே, அவரிடம் கொண்ட அருவருப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள இயலவில்லை. இயலவில்லை, என்பது கூடச் சரியல்ல, காலம் பிறக்கவில்லை.

அக்டோபர் — அந்தக்காலம்—எதிர்ப்பார்த்திருந்தவேளை என்று பேசப்படுகிறது.

அக்டோபரில், ஆந்திரம், தனியாகிறது—சென்னை சட்டசபையிலே காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை, இரவல்தேட வேண்டிய அவசியமற்ற அளவுக்கு இருக்கிறது. ஒட்டு உறவு, உரசல், உபசாரம், இவைகள் தேவை இல்லை. இந்த ஒட்டு உறவு வேலைக்குத்தானே ஆச்சாரியார் தேவைப்பட்டார், அக்டோபருக்குப் பிறகு, அதுவும் தேவையில்லையே. இந்நிலையில், ஆச்சாரியாரை அரசுக் கட்டிலிலே இனியும் இருக்கச் செய்ய வேண்டுமா, என்று கேட்கிறார்கள், காமராஜர் கூட்டத்தினர்.

இந்த நிலையை ஏற்படுத்தும் விதமாகவே, காமராஜர், சுற்றுப்பயணமும் பேச்சும் இருந்திடக் காண்கிறோம்.

முன்பெல்லாம்—அதாவது காமராஜரின் 'பதுமைகள்' ஆட்சியிலிருந்த காலங்களில், மக்கள் படும் அவதிகளைக் கண்டாலும், அவை

(5-ம் பக்கம் பார்க்க)

"மன்றம் அச்சகம்" துவக்கம்

அன்புடையீர்;

வணக்கம். அச்சடிக்கும் வேலைகள் செய்யவும், நூல் — இதழ் வெளியிடவும் இயலும் வண்ணம் "மன்றம் அச்சகம்" என்ற பெயரில், அச்சகம்ஒன்று, 26, கைனியப்பன்தெரு. மண்ணடி சென்னை-1 முகவரியில் நிறுவியுள்ளேன் என்பதைக் களிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அச்சகம் நிறுவுவதற்குப் பேருதவியாக இருந்த அண்ணா அவர்களுக்கும், நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சகம் வாழவும், வளரவும் அன்பர்களின் இடையீடில்லாத நல்ல ஒத்துழைப்புத் தேவை என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

"மன்றம்" இதனைழத் திங்கள் இருமுறை வெளியீடாகமே திங்களிலிருந்து வெளிக் கொண்டு வரவும் எண்ணியுள்ளேன்.

என்றும் நன்றி மறவா அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்.

திராவிடநாடு

காஞ்சி] 12—4—53 [ஞாயிறு

'விடை தா, வாரீர்!'

★

தீரர்கள்வாழ் திருச்சி, திராவிட மக்களை அழைக்கிறது. வருக தோழர்காள்! வருக வீரர்காள்!! என்று, அன்பழைப்பு விடுக்கிறது.

வரும் 25, 26 தேதிகளில் லால்குடியில் நடைபெறப்போகும் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாட்டிலும், சமூக சீர்திருத்த மாநாட்டிலும் கலந்துகொள்ள வாரீர்! வாரீர்!! என்று குதூகலத்தோடு அழைப்பு விடுக்கிறது.

அரசியல் வாழ்விலீடுபட்டோருக்கு, ஆனந்தம் ஏற்படுவதென்றால், மிக மிக ஆச்சரியமான விஷயமாகும். அதிலும், நமது வீரர்கள், தாக்கும் தடியினை, சுடும் துப்பாக்கிகளை, ஆளவந்தாரின் சட்ட அம்புகளை, அடிக்கடி சந்தித்துக் கிடப்பவர்கள்.

துன்பங்களில் சுழல்பவர்கள் இன்பத்தோடு அழைப்புவிடுக்கிறார்கள்.

எதற்கு? தமது தொண்டின் மூலம், முன்னேற்றக் கொள்கைகளுக்குத் திருச்சி மாவட்டத்திலேற்பட்டிருக்கும் செல்வாக்கை நாட்டின் விழிகளாம் மக்களுக்குச் சமர்ப்பிக்க, அவர்களின் ஆர்வ உள்ளம் அன்பழைப்பு விடுக்கிறது.

லால்குடிக்கு வருக! வருக!!— என்று அழைக்கிறார்கள். கொள்ளிடக் கரையின் பசும் சோலையாம், லால்குடிக்கு அழைக்கிறார்கள், திராவிடத்தை.

"எம் அருமைத் தோழர்காள்! இலட்சியச் சீயங்காள்! இதோ புறப்படப் போகிறோம். எமக்கு விடை கொடுத்து அனுப்புங்கள். அறப்போரிலீடுபடப்போகிறோம் — ஆட்சியாளரின் தடி, எங்களை உருமாற வைக்கலாம். துப்பாக்கி, எங்களில் பலரது உயிரைக் குடிக்கலாம். அறப்போருக்குப் புறப்படப் போகிறோம்! அருமை நண்பர்காள்! அந்தப் போருக்குச் செல்லுமுன், ஒருமுறை உங்களையெல்லாம் சந்திக்க விரும்புகிறோம்; விடைபெற்றுக்கொள்ள விழைகிறோம். நாமெல்லாம் சிரித்துப் பேசி, விவாதித்துக் கிடந்த இன்பநாட்களை எங்களில் பலர் இழக்க நேரலாம்! ஏனெனில், நாங்கள் துவக்க இருக்கும் அறப்போரினை, அரசாங்கம் சும்மாவிடாது. ஆகவே, ஒருமுறை உங்கள் முகங்களைக் கண்டு மகிழ வாய்ப்பளியுங்கள்! உங்களோடு கலந்து பேசி, அறப்போருக்குச் செல்லும் எங்களை, களம்புக வாழ்த்தி விடை அளியுங்கள்!!"

என்று—வருத்தத்தோடு அல்ல—குதூகலத்தோடு கூறிட, திராவிட மக்களை அழைக்கிறார்கள், திருச்சியினர்.

அந்த அழைப்பில், அவர்கள் இதுவரை செய்திருக்கும் தொண்டின் பட்டியல் தென்படுகிறது. எங்கெல்லாம் கிளைக் கழகங்கள்! எந்தெந்த இடங்களிலெல்லாம், கழகக் கூட்டங்கள்! 'காடு தாண்டி செல்ல நேரிடும்' கவலையில்லை! 'சின்னஞ்சிறு ஊர்'— அதனாலென்ன? 'அடி உதை கூட கிடைக்கலாமாம்!'— ஆகா! தயாராக இருக்கிறோம்! என்று பட்டி தொட்டிகளெல்லாம் சென்று, கடந்த மாநாடு கூடியதற்குப் பின், இன்றைய மாநாடு கூடும் இடைக்காலத்தில், அவர்கள் செய்திருக்கும் சேவையின் பெருமைகள் ஏராளம். எள்ளிப் பேசியோர், ஏளனம் புரிந்தோர், அனைவரும் இந்த இரண்டாண்டுகளில், நம் கழகத்தில் சேர்ந்திருக்கின்றனர். அது மட்டுமா? மாற்றுக்கட்சியின் முன்னணி வீரர்களாயிருந்து நம்மீது சீற்றத்தையும் சினத்தையும் அள்ளி வீசிய பலரை, திருச்சி இழுக்திருக்கிறது. அவர்களிலே பலர், இன்று திருச்சியின் கழகத் தூண்கள்—மகிழ்ச்சி மலராதா?

கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பாசிசத்தை ஒழித்துக் கட்டி, தி.மு.க. ஆதரவு பெற்றோரை, பெருமிதமாக வெற்றிபெறச்செய்து விழா கொண்டாடியது, திருச்சி.

திராவிடப் பெரியோர்களின் ஆசியையும், தாய்மார்களின் 'சென்றுவா, செல்வனே' எனும் சிறப்புரையையும், வீரத் தோழர்களின் 'நாங்களிருக்கிறோம்' எனும் உறுதிமொழியையும், தீரர்கள் வாழும் திருச்சி, லால்குடி மாநாடுகளின் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புகிறது.

தோழர்களின் மாநாட்டு அழைப்பில் அன்புகலந்திருக்கிறது—ஆனால், அதில் தொனிக்கும் வீரம், நம் இதயத்தில் கனலைக் கிளப்புகிறது.

அறப்போர்—தன்மானப் போர்—திருச்சியில் துவக்க இருக்கிறார்கள் விரைவில்! வாட்டிடும் வடநாட்டு ஏகாதிபத்யத்தின் திமிருக்குச் சாட்டையடிதரும், அறப்போர், ஆரம்பமாகப்போகிறது, திருச்சி மாவட்டத்தில்! டால்மியாபுரம் — இந்தப் பெயரைக்கேட்கும்போதே, ஒருவித ஆத்திரம் பிறக்கும் நமக்கு—அங்கே, நமது திருச்சித் தீரர்கள், விரைவில் பாசறை அமைக்கப் போகிறார்கள். பனியா ஆதிபத்யத்தை எதிர்த்து பரணி பாடப் போகிறார்கள். கல்லக்குடி — இது பழம் பெயர். அங்கே, திராவிடத் தாய் அள்ளி வழங்குகிறாள், மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கட்டுவதற்கான சிமெண்டுப் பொருள்களை! ஆனால், அது, யாரிடம்? வடநாட்டு டால்மியாவிடம்!! அதுவும் எத்தகைய டால்மியா? — தென்னாட்டுப்பார்ப்பனீயத்துக்குப் பாதுகாவலனை இருக்கும் டால்மியாவிடம்! அண்மையில் சிலமாதங்களுக்கு முன்பு தென்னாட்டுப் பார்ப்பனப் புரோகிதர்களை யெல்லாம் நூற்றுக்கணக்கில் அழைத்து, மாநாடு ஒன்று கூட்டி, பிராமணா! மமதேவதா!!' என்று காலில் விழுந்தாராம்—அந்தப் பிரபு — வடநாட்டில். புகைப்படங்களோடு, செய்திகள், கண்டோம்! அத்தகைய பிற்போக்குத்தனம் படைந்த டால்மியாவின் பெயரைக் கொண்டிருக்கிறது, திராவிடத்தின் மண்!— இது, திருச்சித்தீரர்களின் உள்ளத்தில் எரிமலையை வெடிக்கச் செய்திருக்கிறது. வடநாட்டுக்கு அழைத்து பிராமண வேதாந்திகளுக்கு விருந்தும் சமாராதனையும் நடத்துகிறார், டால்மியாபிரபு! யாருடைய சொத்தில்? திராவிடத்திலிருந்து சுரண்டிக் கொண்டு போன பொருள் மூலம். அதே நேரத்தில், சிமெண்டு ஆலையில் உழைத்து மடியும் திராவிடத் தோழர்களின் வயிற்றில் அடிக்கிறார்! வடநாட்டில் 'தீட்சிதர்' மாநாடு கூட்டிய நேரத்தில் — சிமெண்டு ஆலையில் உழைத்த பாட்டாளி மக்கள் இருநூறு பேரை 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறார். அத்தகைய கன்னெஞ்சக்காரரொருவரின் பெயர், கல்லக்குடிக்கு! மான் விளையாடும் காட்டுக்கு புலியின் பெயர்! தேன் கூட்டுக்கு, தேளின் பெயர்!! —இதனை மாற்றி அமைக்கும் அறப்போரில் குதிக்கிறார்கள், திருச்சி தோழர்கள்.

அதற்கு, திராவிடத்தி—மும் தமது திருச்சிக் கிளைக்கழகங்களிடமும் வாழ்த்துரை பெற விழைகிறார்கள்.

ஒன்று கழகமாநாடு! மற்றொன்று சீர்திருத்த மாநாடு!!

முதல்நாள் சீர்திருத்த மாநாடு—சுயமரியாதை இயக்க வீரர், கடமையில் தவறாத சிங்கம், கொள்கைக்காக உழைக்கும் அருமைத்தோழர் ஆருயிர் நண்பர் அ. பொன்னம்பலனார் அவர்களின் தலைமையில் நடைபெறப்போகிறது. மாநாட்டினை மாயவரம் மூதாட்டி, இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் திறந்துவைக்கிறார்கள்.

கழக மாநாட்டிற்கு, காரியமாற்றும் காளை, சொல்லின் செல்வர், ஆட்சியாளர் கண்டு மிரளும் நாவன்மை மிக்க நண்பர் ஈ. வி. கே. சம்பத்து—திராவிடத்தின் சம்பத்து — அவர்கள் தலைமை வகிக்கிறார். தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளராக, இருந்துவரும் சட்டக்கல்லூரிக் காளை, திராவிட மாணவரின் பொதுச் செயலாளர் புன்சிரிப்பும் புத்திக்கூர்மையும் படைத்த கே. ஏ. மதியழகன் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.

மற்றும் தி. மு. க. முன்னணி வீரர்களும், பொதுச் செயலாளரும் பங்கெடுத்துக்கொள்ளப் போகிறார்கள்.

நாட்டில் நடைபெறும் அட்டகாச ஆட்சியினை சட்டசபையில் கண்டித்து முழக்கமிடும் எம். எல். ஏ.க்கள் பலரும் எம். பி.க்களும், மாநாடுகளில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள்.

வழக்கம்போல இரண்டு இரவுகளிலும், நாடக விருந்தும், உண்டு. இசை உண்டு! எழுச்சிகீதம், ஒலிக்கும்!!—அதோடு விடவில்லை, மாநாட்டினர். கருத்தைக் கிளறும் ஓவியக் கண்காட்சியும் நடத்துகிறார்கள். அதனை நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் திறந்துவைக்க இசைந்திருக்கிறார்.

இவ்வளவு அருமையான ஏற்பாடுகளை மாநாட்டு நிர்வாகிகள் செய்து வருகிறார்கள். தமது கொள்கைகளை மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து, கிளைக்கழகத் தோழர்களின் எதிர்கால வேலைகளை அமைத்துக் கொடுத்து, அறப்போருக்கு விடை பெற்றுக்கொள்ளும் காட்சியாக அமைந்திருக்கிறது இம்மாநாடு. அழகான பந்தலில்—கூடுகிறது. அத்தகைய பந்தல் அமைக்கும் பொறுப்பை கழக வீரர் திருச்சி ராபி ஏற்றிருக்கிறார்.

மாநாடு கூடும் மேடைக்கு மறைந்த மாவீரர் பாண்டியனாரின் பெயரிடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெருமிதமான ஏற்பாடுகளோடு, தங்களது இரண்டு வருடத்திய சாதனைகளைச் சமர்ப்பித்து, எதிர்காலத் திட்டங்களை வகுத்துக்கொண்டு, அறப்போருக்கான விடையையும் பெற்றுக் கொள்ள விழைகிறது, திருச்சி.

அந்தத் திருச்சியை வாழ்த்திட, திராவிட மக்காள், திரண்டு வாரீர்! கலங்கா உள்ளம் படைத்த காளைகளுக்கு ஆசிதர, அனைவரும் வாரீர்! இதுபோன்ற சந்தர்ப்பம் அடிக்கடி ஏற்படுவது கடினம். லால்குடி—வடநாட்டு ஆதிபத்யத்துக்கு எச்சரிக்கை விடப்போகிறது. எச்சரிக்கை விடும் சந்தர்ப்பம், முதன் முறையாக வாய்க்கிறது. அதனைக் கண்டு மகிழ, கேட்டுக் களிக்க, கிளம்புங்கள், லால்குடிக்கு! வரும் 25-4-53, 26-4-53 கவனமிருக்கட்டும்! நம் வரலாற்றில் இரண்டு முக்கிய நாட்கள் அவை!!

★ இலங்கைவாழ் திராவிடருக்கு ★

தோழர் சிற்றரசு ஒரு கிழமை அளவு, இலங்கையில் சுற்றுப்பயணம் செய்யக்கிளம்புகிறார். அதற்கான 'பாஸ்போர்ட்' வழங்கப்பட்டு விட்டது.

திருச்சியில், மிக முக்கியமான 'நேரடி நடவடிக்கை'த் திட்டம் தீட்டுவதற்காக, இந்தத் திங்கள் 25, 26, நாட்களில் மாநாடு நடைபெறுகிறது — தோழர் சிற்றரசு அது சமயம், மாநாட்டில் கலந்துகொண்டு தன் அரிய கருத்தைக் கூறவேண்டியது அவசியம் — எனினும் இலங்கைத் தோழர்களின் நீண்டநாள் ஆவலைக் கெடுத்திட மனமின்றி, தோழர் சிற்றரசு இலங்கை செல்ல அனுமதி அளித்துள்ளேன்.

சுயமரியாதை இயக்கச்சுடரொளியாகவும், திராவிட இயக்கமுரசொலியாகவும் திகழும் தோழர் சிற்றரசு இலங்கை வருவது அங்குள்ள திராவிட மக்களுக்கு நல்லதோர் வாய்ப்பாகும்.

இலங்கையில். பல்வேறு பகுதிகளில், திராவிட முன்னேற்றக்கழக கிளைகள் அமைக்கப்பட்டு, நல்ல விதமான பணியாற்றப்பட்டு வருவதுகேட்டு அகமகிழ்கிறேன்.

தாயகத்தின் விடுதலைக்காக, இலங்கைவாழ் திராவிட மக்கள் காட்டிவரும் பேரார்வம் போற்றுதலுக்குரியதொன்றாகும்.

இலங்கைவாழ் திராவிடர்கள் என்று கூறுகிறேன் — எனினும், அங்கு திராவிட மக்களுக்குள்ள அரசியல், பொருளாதாரக் கஷ்டங்கள் அதிகம் என்பதையும் — அதிகரித்தவண்ணம் உள்ளன என்பதையும் மறந்தேன் என்று பொருள் கொள்ளவேண்டாம்; கடல்கடந்தும் திராவிடர் கண்ணீர் சிந்தியபடிதான் உள்ளனர். எனினும் தாயகத்தின் விடுதலைக்காகத் தங்கள் 'பங்கு' செலுத்தப்படவேண்டும் எனும் கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு சிரிய காரியமாற்றி வருகின்றனர்.

பகட்டான விளம்பரமும், ஆளவந்தாரின் ஆதரவு எனும் அணைப்பும் கிடைக்கப்பெறாதிருந்தும், இலங்கையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், அறிவியக்கப் பிரசாரத்தைத்தொடர்ந்து நடத்தி வருகின்றனர் — அவர்தம் நல்லார்வத்தைப் பாராட்டுகிறேன்.

சின்னாட்களுக்கு முன்பு திருக்குறள் விழாச் சொற்பொழிவாற்ற அங்கு வந்திருந்த தமிழ்ப் பேராசிரியர், நண்பர், அன்பழகன் அவர்களும், இலங்கை வாழ் திராவிட மக்களுடைய ஆர்வத்தை மகிழ்ச்சியுடன் எடுத்துரைத்தார்.

எனவே தோழர் சிற்றரசு அவர்களின் இலங்கைப் பயணம், ஆர்வத்தை அதிகப்படுத்தவும், முறைப்படுத்தவும், திராவிட மக்களிடை புதியதோர் எழுச்சியை உண்டாக்கவும், பயன்படும், என்று உறுதியாக நம்புகிறேன். தோழர் சிற்றரசு அப்பணிக்குத் தக்கதிறம் கொண்டவர். இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அன்னாரின் சுற்றுப்பயணத்தைப் பயனும் திருவும் உடையதாக ஆக்கித்தரக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுக் கூட்டங்கள் நடத்துவதோடு அமையாமல், கிளைக் கழகங்களை நடத்திச் செல்லும் அலுவலர்கள் அனைவரும் கூடி, இயக்கத்தைச் செம்மைப் படுத்த வழிவகை காணும் சிறப்புக் கூட்டங்களையும் நடத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

தோழர் சிற்றரசு அவர்களின் சுற்றுப்பயணத்தின் போது, இலங்கையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம், கட்டுப்பாட்டையும் உற்சாகத்தையும், உரத்தையும் பெரும் அளவுக்குப் பெற்று, மேலும் சிறப்பெய்தும் என்று உறுதியாக நம்பி நண்பரை அங்கு அனுப்பி வைக்கிறேன். வாழ்க திராவிடம்! வெல்க திராவிடம்!

அன்பன்,
அண்ணாதுரை.

ஆச்சாரியார் அனுமாரைக் கண்டார்!
சாஸ்திரியார் வால்மீகியை அறிந்தார்

[அடிகள்]

அந்த இரண்டுமட்டும் இருந்துவிட்டால், நமக்கு வேறெதுவும் தேவையில்லை. அந்த இரண்டைக் கொண்டே எது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் — எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். சுருங்கச் சொல்லவேண்டுமானால், அந்த இரண்டுமட்டும் இருந்துவிட்டால், எத்தவிதமான குறையும் நமக்கு ஏற்படாது—இது உறுதி—நிச்சயமாக நம்புங்கள். அந்த இரண்டிலும் இல்லாத ஒன்று வேறெதிலும் கிடையவே கிடையாது.

"எல்லாம் இவ்விரண்டின்பால் உள — இவ்விரண்டில் இல்லாத எதுவும் இல்லை"

என்று ஒரு புதுமொழியை வேண்டுமானால்கூட உண்டாக்கி வைத்துக்கொண்டு, அவ்விரண்டைப்பற்றிய பெருமைகளை உலகுக்கு உரைத்த வண்ணம் இருக்கலாம்.

அரசியலைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமா? பொருளாதாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? சமுதாயத்தைப்பற்றிச் சந்தேகத் தெளிவுபெற வேண்டுமா? நட்புமுறை என்றால் எப்படி? உறவுமுறை என்றால் என்ன? எதெதை எல்லாம் எப்படி யெப்படித் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அதை எல்லாம் அப்படியே எடுத்துக் காட்டும் கண்ணாடி போன்றவை அவ்விரண்டும். நாம் உலகில் நடமாடுவதற்கு எப்படி இரண்டு கண்கள் இன்றியமையாதவையோ, அதுபோல, அவ்விரண்டும் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவையாகும். கண்ணற்றவனுக்குக் கோல் தேவைப்படுவதுபோல், கருத்தற்றவர்களுக்கு அவ்விரண்டும் தேவைப்படுகின்றன.

இப்படிப்பட்ட ஆணித்திறமான ஆதார விளக்கங்களைக் கூறி, அந்த இரண்டின் அருமை பெருமைகளைப் பற்றி அள்ளி இறைத்திருக்கிறார், நமது அன்பிற்குரிய ஆச்சாரியார்.

4-4-53ல் சென்னையில் நடைபெற்ற ஒரு ஆஸ்திக சங்கத்தின் இராமநவமி விழாவில் கலந்துகொண்ட அமைச்சர், தமது ஆராய்ச்சியின் விளைவாக எழுந்த 'தெளிவான' விளக்கங்கள் பலவற்றைத், தமது 'பிரஜை'களுக்கு 'இனாமாக' வழங்கியிருக்கிறார். நோபல் பரிசு பெறக்கூடிய அரிய பெரிய ஆராய்ச்சி உண்மைகளை அன்பர் ஆச்சாரியார் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

"இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டையும் படித்தாலே போதும்—எல்லாப் படிப்பும் வந்துவிடும்"

இப்பொழுது தெரிகிறதா, அந்த இரண்டும் எவை என்பது! ஒன்று இராமாயணம், மற்றொன்று பாரதம். இந்த இரண்டிலும் இல்லாதது வேறெதிலும் இல்லை என்பது ஆச்சாரியாரின் ஆராய்ச்சியின் பயனாக எழுந்த 'உண்மை'! இந்த இரண்டையும் படித்துவிட்டால், போதும், எல்லாவிதமான அறிவும் ஒருவனுக்கு உண்டாகிவிடுமாம்.

முற்றிலும் உணரும் அறிவைப் பெறுவதற்கு மிக மிக எளிதான வழி இருக்க, அதாவது இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டையும் படித்தாலே போதும் என்ற நிலையிருக்க, ஏனோ இத்துணை கல்லூரிகளும் பிறவும் ஏற்படுத்தி, அறிவைப் பெறுவதற்கு அலைந்து திரிகிறார்கள்! இராமாயணத்தைக் கற்றுக்கொடுக்க ஒரு சாஸ்திரியார்—பாரதத்தைக் கற்றுக்கொடுக்க ஒரு வாரியார் என்று இப்படி நாலைந்துபேர் நாட்டில் இருந்தால் போதுமே, அறிவு ஆலமரம்போல் வளர்ந்துவிடுமே! மக்களுக்கு அறிவை உண்டாக்குவதற்காக ஆயிரக்கணக்கான புத்தகங்களும், அந்த அளவில் சிறிதும் குறையாத பேராசிரியர்களும் ஏன்?

ஆலமரத்தடியில் ஒரு சாஸ்திரியாரும், அரசமரத்தடியில் ஒரு வாரியாரும், அவர்களைச் சூழ ஆயிரக்கணக்கான மக்களும் உட்கார்ந்துகொண்டு, இராமாயண பாரதங்களைப் படித்தும் கேட்டும் பயன் பெறுவதைவிட்டு, இலட்சக்கணக்கில்—கோடிக்கணக்கில் பணத்தைப் பாழாக்கிப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், பிறவும் ஏற்படுத்தி, அவற்றின் வாயிலாக அறிவைப் பெறலாம் என்று கருதி, எவனெவனோ எழுதிவைத்த ஏடாகூடமான புத்தகங்களை ஏன் படித்துப் பாழாகவேண்டும்!

இராமாயணத்தைப் படித்ததால் தானே இரவைப் பகலாக்கும் ஒளியை (மின்சாரத்தை)ப் பெற முடிந்தது!—பாரதத்தைப் படித்ததால் தானே பறக்கும் கப்பலை (ஏரோப்பிளேனை)க்காண முடிந்தது! இதை விட்டு விட்டு, எதெதையோ படித்து எதெதையோ கண்டு பிடித்து விட்டதாக "முழுப்போய்" பேசி, நாட்டவரை 'ஏமாற்றி'த் திரிகிறார்கள் சிலர்!

இலங்கையில் இருந்து இமயமலைக்குப் பறந்தார் அனுமார்—அங்கிருந்து சஞ்சீவிமலையை அடியோடு பெயர்த்தெடுத்துக் கையில் ஏந்திக் கொண்டு, மீண்டும் இலங்கைக்குப் பறந்து ஒரு விநாடியில் வந்து சேர்ந்தார் என்ற அற்புத நிகழ்ச்சி இராமாயணத்திலன்றோ இருக்கிறது!

துரியோதனன் சபையிலே துரோபதையின் துகிலைத் துச்சாதனன் உரிந்தான். துகிலை உரிய உரிய அது வளர்ந்து கொண்டே இருந்த மாபெரும் அற்புத நிகழ்ச்சி மாபாரதத்திலன்றோ இருக்கிறது! சும்மா சாம்பிளுக்காக இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டினேன். இன்னும் இருக்கின்றன எண்ணற்ற அற்புதங்கள் அந்த இரண்டிலும்! மக்களின் பகுத்தறிவுக்கு நல்ல வேலைதரும் பற்பல 'அற்புத' நிகழ்ச்சிகள் அவை இரண்டிலும் அடங்கியுள்ளன. அவை தம்மை எல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இராமாயண, பாரதங்களைப் படிப்பதன் இன்றியமையாமையைப்பற்றி இங்கு இராசகோபாலாச்சாரியார் பேசிக் கொண்டிருக்கிறார். இதே சமயத்தில் இவரது இனத்தவரான நீலகண்ட சாஸ்திரியார் என்பவர் இலங்கையில்,

"இராமாயணம் ஒரு கற்பனை—உண்மை நிகழ்ச்சி அல்ல—வால்மீகியின் கைச்சரக்கு"

என்று பேசியிருக்கிறார். அன்பர் ஆச்சாரியாரோ "இராமாயணம் எங்கு படிக்கப்படுகிறதோ, அங்கு அனுமாரும் வந்திருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்" என்று மிக மிக மட்டமாக, தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் மக்கள்தான்—அவர்கள் முன்னிலையில் இப்படி எல்லாம் பேசினால், எள்ளி நகையாடார்களா என்ற அச்சம்—வெட்கம் எதுவுமின்றிப் பேசுகிறார். ஆங்கிலம் படித்து, அறிவு துலங்கி, வழக்கறிஞராகி, இன்று நாட்டை ஆளும் அமைச்சராகி இருக்கும் அன்பர் ஆச்சாரியார், அனுமார் கதையைக் கூறுகிறார் என்றால், அவர் அறிவை இழந்து விட்டார் என்று பொருள்! இல்லை! இல்லை!! மற்றவர்களின் அறிவை இழக்கச் செய்வது தான் தாம் பெற்ற அறிவுக்கு ஏற்ற வேலை என்று கருதுவதாலேயே, இராமாயண காலட்சேபத்தில் அனுமாரைக் கொண்டு வந்து நிறுத்தி, 'அதோ பாருங்கள். அனுமார் இராமாயணம் கேட்டுக் கொண்டிருக்கிறார்' என்று மக்களை மந்த வெளிக்கு அதாவது அறியாமை உலகுக்கு அழைத்துச் செல்லப் பார்க்கிறார். "நான் அமைச்சரானது வேறொன்றுக்குமல்ல, அறியாமையைப்பரப்பவே" என்று கூறுவது போல் இருக்கிறது ஆச்சாரியாரின் அனுமார்ப் பேச்சு. கூறுவது போல் இருக்கிறது என்று இழுப்பானேன்— உண்மையிலேயே அவருடைய நோக்கமே — குறிக்கோளே அது தான்.

இராமாயண—பாரதங்களைப் போன்ற முழுமுட்டாள்தனத்தைக் கற்பிக்கும் புத்தகங்களைத் தவிர, அறிவை வளர்க்கும் வேறு நூல்களை மக்கள் படித்தால் தானும் தன்னைப்போன்றவர்களும் நாட்டில் நல்லமுறையில் வாழமுடியாது என்பதனை நன்குணர்ந்ததாலேயே, பதவி என்னும் பரிவட்டத்தால், தான் இன்னார் என்பதை அறியமுடியாதபடி மறைத்துக்கொண்டு, மக்கள் முன்னிலையில் வந்து நின்றுகொண்டு, "நான் யார் தெரியுமா—நாட்டை ஆளும் அமைச்சன் — நான் கூறுவது எதுவானாலும், அது அறிவுரை என்றே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்ற இறுமாப்புடன் பேசுகிறார்.

நாட்டிலுள்ள அத்தனை பேரையும் ஏமாளிகள் — ஏதுமறியாதவர்கள் என்றெண்ணிக்கொண்டு, இராமாயணமும் பாரதமும் படித்தால் எல்லாப்படிப்பும் வந்துவிடும்என்று அறிவு வரண்டு — உலர்ந்துபோன நிலையில்நின்று பேசுகிறார். இல்லையேல், சரித்திரப் பேராசிரியர் என்ற தகுதியைப் பெற்ற நீலகண்டசாஸ்திரியார் "இராமாயணம் ஒரு கற்பனை நூல்" என்று பேசும அதே நேரத்தில், நாட்டின் ஒருபகுதியை ஆளும் தகுதியை எந்தக்காரணத்தாலோ பெற்ற ஆச்சாரியார் 'இராமாயணம் படித்தால் எல்லா அறிவும் வந்துவிடும்' என்றுபேசுவாரா?

இராமாயணத்தைப்பற்றிச் சரித்திரம் கற்ற சாஸ்திரியார் கூறுவதை நம்புவதா? சரித்திரம் தெரியாத ஆச்சாரியார் கூறுவதை நம்புவதா?

பண்டிதநேரு அவர்கள் இராமாயணத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில், அது, ஆரிய — திராவிடப் போராட்டத்தைக் குறிக்கும் ஒரு நூல் என்று கூறுகிறார்.

ஒருவர் கற்பனை என்கிறார், மற்றொருவர் இரு இனத்தவரின்வேறுபாட்டைக் குறிப்பது என்கிறார்.

இவர்களில், இராமாயணத்தை ஆரிய — திராவிடப் போராட்டம் என்று கூறுபவர், இராமாயணத்தைப் படித்ததும், கதையின் போக்கு ஆரியர்களுக்கும், திராவிடர்களுக்கும் உள்ள — ஒன்றுக்கொன்று பெருத்த அளவில்காணப்படும் வேறுபாடு நன்குதெரிவதால், அதனை ஆரிய திராவிடப் போராட்டம் என்று குறிப்பிட்டார். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது என்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். நீரைத் தொட்டுப் பார்த்தால்தான் அது வெந்நீரா அல்லது தண்ணீரா என்பது தெரியும்; அதுபோலத்தான் பண்டிதநேரு அவர்கள் இராமாயணத்தைத் தொட்டுப் பார்த்திருக்கிறார். பார்த்ததும் அது ஆரிய — திராவிடப் போராட்டம் என்பது அவருக்குத் தெரிகிறது.

இராமாயணத்தை உண்மை என்று கூறும் ஆச்சாரியார் இராமாயணத்தையே படிக்கவில்லை என்றே தெரிகிறது; ஒருவேளை படித்திருந்தாலும், அவர், அதனைப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்கவில்லை என்றே தெரிகிறது. சிறிதளவாவது பகுத்தறிவோடு படித்திருந்தால், இராமாயணம் படிக்கும் இடத்தில் அனுமார்வந்து கேட்டுக்கொண்டிருப்பார் என்று, மற்றவர்கள் கேலியாகக்கூடப் பேசக் கூச்சப்படும் இந்த நிகழ்ச்சியைச் சிறிதும் கூச்சமும் நாணமும் இன்றிக் கூறியிருப்பாரா? இராமாயணம் படிக்கும் இடங்களில் அனுமார் வந்திருந்ததை அன்பர் ஆச்சாரியார் பல தடவைகளில் பார்த்ததுபோலத் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

"இராமர், சீதை ஆகியோரைப் பற்றிய கதாகாலட்சேபம் எங்கு நடைபெற்றாலும் அங்கு அனுமார்வந்து காலட்சேபம் கேட்கிறார். அனுமாரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்தவரம் அவருக்கு அளிக்கப்பட்டது. ஆகையால், நாம் அனைவரும் நம்முடன் ஆஞ்சநேய பகவானான அனுமாரும் கூட உட்கார்ந்து கதை கேட்கிறார் என்று உணர வேண்டும்"

என்பதாக எவ்வளவு வலியுறுத்திக் கூறுகிறார்பாருங்கள். இப்படிப்பட்ட ஒருவரை இராமாயணம் படித்தவர் தான்என்று எப்படிஒப்புக்கொள்வது? இன்று நாமும் ஆச்சாரியாரும் பார்க்கும் ஆஞ்சநேய பகவான்மார் அனைவருமே மரத்துக்கு மரம் தாவிக்கொண்டு இருக்கிறார்கள், தப்பித்தவறி இராமாயண காலட்சேபம் நடக்கும் இடங்களுக்கு ஓரிரு ஆஞ்சநேய பகவான்மார் வருகிறார்கள் என்பது என்னவோ மறுக்கமுடியாத உண்மைதான்—ஏன் அங்கு வருகிறார்கள்? இராம கதா காலட்சேபம் கேட்கவா? அல்ல! அல்ல!! அங்கு வைக்கப்பட்டிருக்கும் பொரி, கடலை, பழம் முதலியவற்றை, அங்கு குழுமியிருப்பவர்கள் இராமனின் கலியாண குணங்களைக் கேட்டு ஆனந்தக்கடலில் அமிழ்ந்தியிருக்கும்சமயமாகப் பார்த்து, திருடிக்கொண்டு போவதற்காகவே ஒவ்வோர் சமயங்களில் அவர்கள் அங்கு எழுந்தருளுவதுண்டு.

இராமர் ஆண்டதாகச் சொல்லப்படும் அயோத்திக்கும் பண்டித நேரு அவர்கள் வாழும் அலகாபாத்துக்கும் இடையே ஓடும் புகை வண்டியில் அவ்வப்போது செல்பவர்களுக்கு நன்றாகத் தெரியும் இந்த ஆஞ்சநேய பகவான்மாரின்

அளவற்ற திருவிளையாடல்களைப் பற்றி! அயோத்திக்கும் அலாகாபாத்துக்குமிடையே ஆயிரக் கணக்கான ஆஞ்சநேய பகவான்மார் டிக்கட் இல்லாப் பிரயாணம் செய்தவண்ணம் உள்ளனர். இதை இன்றும் நேரில் பார்க்கலாம். இவர்கள் நம்மிடம் எவ்வளவு தாராளமாக (Free)ப் பழகுகிறார்கள் என்பதை நான் நேரில் கண்டிருக்கிறேன். நான், வடக்கே, கேதாராம், நேப்பாளம், பத்திரிநாராயணம், காஷ்மீருக்கு அருகாமையிலுள்ள அமிர்நாதம் முதலான இடங்களுக்குப் போய் வந்தபோது இந்த ஆஞ்சநேய பகவான்மாரின் திருவிளையாடல்களைப் பற்றி நன்கறிந்திருக்கிறேன். அலகாபாத்திலிருந்து அயோத்திக்குச் செல்வதற்கிடையில், அந்தப் புகைவண்டியில் இருப்பவர்களிடம் உள்ள தின்பண்டங்கள் எதுவும் எஞ்சியிருக்காது. எல்லாவற்றையும் எம்பெருமானும் இராமரின் தூதுவர்கள் தின்று ஏப்பம் விட்டு, எம்மைப் பார்த்துப் பல்லை இளித்துக் காட்டிவிட்டுப் போய்விடுவார்கள். அந்த அளவுக்குத் திருவருட்கடாட்சம் பெற்றவர்களாக்கும் அந்த அனுமார் பெருந்தெய்வங்கள்.

இனி, இராமாயணத்தைக் கற்பனை என்று கூறும் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், பண்டித நேரு அவர்களைப்போல் தொட்டதோடு நின்றுவிடவில்லை. ஆச்சாரியாரைப் போல் படித்ததோடும் நின்றுவிடவில்லை. தொட்டார்—படித்தார்—பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்தார்—இராமாயணம் ஒரு கற்பனை நூலேயன்றி, உண்மையல்ல என்பதை ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார். பண்டிதரும் ஆச்சாரியாரும் வேறு துறைகளில் வல்லுனராய் இருக்கலாம்—நாம் மறுக்கவில்லை—அவர்கள் வல்லமையற்றவர்கள் என்று கூறத் துணியவுமில்லை—விரும்பவுமில்லை. ஆனால், சரித்திரங்களை ஆராய்வதிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் கழித்து அத்துறையிலே பேராசிரியப் பட்டம் பெற்ற நீலகண்ட சாஸ்திரியார் போன்றவர்களின் ஆராய்ச்சி உண்மைகளை அலட்சியப்படுத்திவிட முடியாது. ஆச்சாரியாரும், பண்டிதரும் போன்ற அரசியல் தலைவர்கள், தங்கள் ஓய்வு நேரங்களில்—சீட்டாடுவதுபோல்—சரித்திரங்களைப் படிப்பவர்கள் —. அப்படிப்பட்டவர்களிடமிருந்து சரித்திரத்தின் அடிப்படை உண்மையை அறிந்துகொள்ளமுடியாது-அறிந்துகொள்ள முயல்வதும் தவறு. என்றபோதிலும் தங்களுக்கிருக்கும் பதவியைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு, "நாம் கூறுவதைக் கேளுங்கள்—இதுதான் உண்மை—மற்றவர்கள் கூறுவதெல்லாம் பொய்" என்று கூறும்போதுதான் நம்போன்ற நடுநிலையாளர்களுக்கு எரிச்சலும், வேதனையும், ஏன் இவர்கள் இப்படி எல்லாம் பேசித் திரிகிறார்கள் என்ற வெறுப்பும் உண்டாகிறது.

பகுத்தறிவாளர்களாகிய நாம், சாஸ்திரியார் கூறுவதையும், ஆச்சாரியார் போன்றார் கூறுவதையும் நடுநிலைமைவகித்துப் பார்த்து எது உண்மை என்பதைக் கண்டறிபவர்கள். ஆஞ்சநேயரைப்பற்றிய ஆராய்ச்சியைக் கண்டறிந்து கூறிய ஆச்சாரியாரின் கூற்று உண்மையா? வால்மீகியின் உள்ளக் கிடக்கையை ஆராய்ந்து நமக்கறிவித்த நீலகண்ட சாஸ்திரியாரின் முடிவு உண்மையா? என்பதனைக் கண்டுபிடிப்பதற்குத்தான் பகுத்தறிவு என்று பெயர்—பொருள்.

எங்காவது - யாராவது—தப்பித் தவறி—ஆனால் துணிவோடு ஒன்றைப்பற்றிய உண்மையைக் கூறிவிட்டால், அதை எப்படியாவது மக்கள் மனதில் பதியவிடாதபடி தடுத்து விடவேண்டுமென்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர்கள் நம் நாட்டில் இன்னும் பலர் இருக்கிறார்கள். இவர்களின் பட்டியல் குறையவேண்டும். இந்தப் பட்டியல் குறைப்பு வேலை ஆமைவேகத்தில் சென்றுகொண்டிருப்பதால்தான், பகுத்தறிவாளர்களின் முயற்சிகள் இங்கு விரைவில் வெற்றியடைய முடியாமல் போகின்றன.

18-3-53ல் கொழும்பில் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் 'இராமாயணம் ஒரு கற்பனைக்கதை—வால்மீகியின் கைச்சரக்கு' என்று பேசினால், உடனே, அதைத் தொடர்ந்து, இங்கு நமது அன்பிற்குரிய ஆச்சாரியார் "இராமாயணம் ஒரு உண்மைக் கதை" என்பதை வலியுறுத்தப் படாதபாடு பட்டு வருகிறார். 4-4-53ல் ஒரு ஆஸ்திக சங்கத்தில் "இராமாயணமும் பாரதமும் படித்தால் போதும் — அவற்றில் எல்லா அறிவும் அடங்கியுள்ளன என்று கூறிவிட்டு, மறுநாள், 5-4-53ல் ஒரு நூல் நிலைய சங்க வெள்ளிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

> "கெட்ட புத்தகங்களை மக்கள் படியாமல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும்"

என்று குறிப்பிட்டுள்ளார். ஆச்சாரியாரின் கருத்துப்படி, அல்ல, ஆராய்ச்சித் தெளிவின்படி, இராமாயணமும், பாரதமும் தவிர, மற்றப் புத்தகங்கள் எல்லாம் கெட்டவை என்பதுதானே பொருள். இல்லையென்றால் இராமாயணமும், பாரதமும் படித்தால் எல்லாப் படிப்பும் வந்துவிடுமென்று நாக்கூசாது கூறியிருப்பாரா? கருத்துத் தெளிவற்றவர்கள்கூட இவ்விதம் பேசியிருக்க மாட்டார்களே என்று நினைக்கிறீர்களா? அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஏன் இப்படிப் பேசினீர்கள் என்று ஒரு நீலகண்ட சாஸ்திரியோ; ஒரு வ. ரா. வோ தான் வைரத்தை வைரத்தால் அறுப்பது போல் கேட்கமுடியுமே தவிர, நானோ, நீங்களோ கேட்டால், மிக எளிதாக நமக்கு நாத்திகப் பட்டம் சூட்டி நயமாகத் தப்பித்துக்கொள்வாரே!

> "ஆஸ்திகர்கள் இருக்கும் இடத்தில் நாஸ்திகர்களைப் பற்றிப் பேசினால் ஆஸ்திகத்தின் புனிதத்தன்மை கெட்டுவிடும்."

என்பது ஆச்சாரியாரின்கண்டுபிடிப்பாயிற்றே! நாஸ்திகத்தால் ஆஸ்திகத்தின் புனிதத்தன்மை கெட்டுவிடுமென்றால், அப்படிப்பட்ட நோந்துபோன ஆஸ்திகத்தை ஏன்கட்டிக்காக்கவேண்டும்? ஆஸ்திகர்களின் கணக்குப்படி, நாஸ்திகம் நாட்டில் மிக மிகக் குறைவாயிற்றே! இந்தக் குறைந்த அளவில்உள்ள நாஸ்திகம், மிகப்பெரிய அளவில் — அதாவது ஆளவந்தார்களின் முழுப் பாதுகாப்பிலுள்ள ஆஸ்திகத்தின் புனிதத்தன்மையை எப்படிக் கெடுத்துவிடமுடியும்? ஆனால், ஒருகுடம்பால் ஒருதுளிமோரால்தயிராவதுபோல், பெரும் அளவில் உள்ள ஆஸ்திகத்தைச் சிறு அளவில் உள்ள நாஸ்திகம் நிச்சயம் தன்மயமாக்கிவிடும் என்பது என்னவோ மறுக்கமுடியாத உண்மைதான். இதனை அறிந்துதான்போலும், அன்பர் ஆச்சாரியார், "ஆஸ்திகர்கள் இருக்கும் இடத்தில் நாஸ்திகர்களைப்பற்றிப் பேசக்கூடாது" என்று கூறியிருக்கிறார். பாலில் இருந்து தோன்றியதுதான் மோர் என்றபோதிலும், மோரின் ஒரு துளி, ஒரு குடம் பாலையோ அதற்கும் அதிகமாகவுள்ள பாலையோ தன்மயமாக்குவதுபோல், ஆஸ்திகத்தினின்றும் தோன்றியதாகக் கூறப்படும் நாஸ்திகம் (இதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை) பெரும் அளவில் பரந்திருக்கும் ஆஸ்திகத்தைக் கட்டாயம் — நிச்சயமாக அழித்தொழித்துவிடும். இதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

நாஸ்திகம், ஆஸ்திகத்திலிருந்து தோன்றிய ஒரு வளர்ப்புப்பிள்ளை என்பதை எந்தப் பகுத்தறிவாளனும் ஒப்புக் கொள்ளமாட்டான். ஆஸ்திகம் என்று தோன்றிற்றோ, அன்று அதே நொடியில்—ஆஸ்திகம் முந்தியதா அல்லது நாஸ்திகம் மூந்தியதா என்று சொல்லமுடியாதநிலையில் நாஸ்திகமும் தோன்றியதாகும். உடன்பிறப்பாளர் என்றோ, இரட்டைப்பிள்ளை என்றோகூடச் சொல்லக்கூடாதநிலையில் இருப்பவைதான் ஆஸ்திகமும், நாஸ்திகமும். வாதத்துக்கு வேண்டுமானால் சொல்லலாம் ஆஸ்திகம் முந்தியது — நாஸ்திகம் பிந்தியது என்பதாக. ஆஸ்திக, நாஸ்திகக் கொள்கைகள் எதுவும் இல்லாதிருந்த மக்கள் வாழ்ந்த காலத்தில் எவனோ ஒருவன், கடவுள்—மதம் என்ற கொள்கையைப் பரப்ப முயன்றபோது கடவுளும் மதமும் மக்கட்பண்புக்கு மாறுபட்டவை என்று இன்னொருவன் மறுத்ததன் விளைவாக, ஆஸ்திக — நாஸ்திகம் உண்டாகியிருக்கலாம். கடவுளும் மதமும் இல்லாமல் மக்கள் வாழ்ந்த காலம் ஒன்றுண்டு என்பதுதான் டார்வின் ஆராய்ச்சியாகும். அதனை இங்கு விரிப்பிற் பெருகும்.

ஆஸ்திகர்கள் குழுமியிருக்குமிடத்தில் நாஸ்திகர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்று கூறிய ஆச்சாரியார்,

> "நாஸ்திகம் நம் நாட்டில் வெற்றியடையாது. விரைவில் நாஸ்திக மனப்பான்மை ஒழிந்து ஆஸ்திகம் செழித்தோங்கும் என்பது உறுதி"

என்று கூறியிருக்கிறார். ஆஸ்திகர்கள் முன்னிலையில் நாஸ்திகத்தைப் பற்றிப் பேசக் கூடாதென்று கூறியவரே, ஆஸ்திகர்கள் முன்னிலையில் நாஸ்திக ஒழிப்பு வேலைக்கு அஸ்திவாரம் போடுவது போல பேசியிருக்கிறார். "நாஸ்திகம் நம் நாட்டில் வெற்றியடையாது" இது ஆச்சாரியாரின் நம்பிக்கை. நம் நாடல்லாத வேறு நாடுகளில் ஆஸ்திகம் வெற்றி பெறாது—நாஸ்திகம் தான் வெற்றி பெறும் என்று ஏன் ஆச்சாரியார் கூறுகிறார் என்பது நன்றாகத் தெரிகிறது. எப்படியென்றால், ஆச்சாரியாரின் கண்டுபிடிப்புகளான 'நல்ல புத்தகங்கள்" அதாவது இராமாயணமும் பாரதமும் அங்கெல்லாம் கிடையாது. எனவே அங்கெல்லாம் நாஸ்திகம் வெற்றி பெறும்—இங்கு முடியாது என்று கூறுகிறார். இதனை அடிப்படையாக வைத்துத்தான், அன்பர் ஆச்சாரியார், இராமாயணமும் பாரதமும் படித்தால் போதும்—அதில் எல்லாப் படிப்பும் அடங்கியுள்ளன என்று கூறுகிறார். நாமும் இந்த வாதத்தை ஒப்புக் கொள்கிறோம். அதாவது இராமாயணமும் பாரதமும் நம் நாட்டில் இருக்கும் வரை அவற்றை மக்கள் நம்பும்வரை நாஸ்திகம் வெற்றியடைவதில் ஓரளவுக்குத் தாமதம் எற்படத்தான் செய்யும். ஏராளமான நீலகண்ட சாஸ்திரிகளும், வா—ரா—க்களும் உண்டாகி, ஆஸ்திகத்தின் மண்டையிலடித்து, இராமாயணம் பாரதம் போன்ற கலைக்குதவாக் கட்டுக்கதைகளைக் கொட்டுங்கள் குப்பையில் என்று கூறும் வரை ஆஸ்திகம் பனிமழை போல் ஆங்காங்கு சலசலத்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால் இந்தச் சலசலப்புகள் அறிவியக்கத்தாரின் நாஸ்திகக் கொள்கையை ஒரு போதும் அசைத்துவிட முடியாதென்பதை இந்தச் சமயத்தில் ஆச்சாரியாருக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

ஆஸ்திகம் புனிதமானது—நாஸ்திகம் அழுக்கு நிரம்பியது என்பதை ஆச்சாரியார் எந்த ஆராய்ச்சியின்மூலம் கண்டுபிடித்தார் என்பது தெரியவில்லை. அரசியல் கொள்கைப்படி, பொருளாதார முறையில் பார்த்தால்கூட ஆஸ்திகத்தால் அளவற்ற பணம் பாழாகிறதென்பதும், நாஸ்திகத்தால் காலணாக்கூட செலவாவதில்லை என்பதும் எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஆஸ்திகம் அநாகரிகத்தையும் நாஸ்திகம் நாகரிகத்தையும் வளர்க்கும் தன்மையுடையவை என்பதும் எவராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

சூதும் வாதும் ஆஸ்திகம் அளித்த ஆபாசம் என்பதும், நேர்மையும் ஒழுக்கமும் நாஸ்திகம் வழங்கிய செந்நெறிகள் என்பதும் உலகறிந்த உண்மையாகும். பொய்யுக்களவும், கொலையும் பிறவும் ஆஸ்திகப் போர்வைக்குள் நின்றுகொண்டு செய்யும் அட்டூழியங்கள் என்பதை எவரே அறியாதார். கடவுளைச் சாட்சிக்கிழுக்கும் வழக்கம் சாதாரண மக்களிடம்தான் இருக்கிறதென்று எண்ணவேண்டாம். இன்று முறை மன்றங் (கோர்ட்டு) களில் நடைபெறும் வழக்குகளில் வாதியும் பிரதிவாதியும் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன் என்று சொல்வது யாருக்குத்தான் தெரியாது — ஒவ்வொருவரும் தான் தான் தப்பித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தின் பேரில் தாங்கள் செய்யும் காரியங்களுக்குக் கடவுளைப் பொறுப்பாளியாக்கிக் கொள்கிறார்கள். வழக்கு மன்றத்தில் இராமனால் கூறப்பட்ட வாக்குமூலம் உண்மையா? இலட்சுமணனால் கூறப்பட்ட வாக்குமூலம் உண்மையா? இரண்டில் ஒன்றுதானே உண்மையாக இருக்கமுடியும். இராமன் இலட்சுமணனை அடித்தான்—அடியால் ஏற்பட்ட காயமும் இலட்சுமணன் உடம்பில் இருக்கிறது. அடியினால் ஏற்பட்ட காயம்தான் என்பதற்கு டாக்டர் சர்டிபிக்கெட்டும் இருக்கிறது; இருந்தும், போதிய சாட்சி இல்லை என்று முறை மன்றம் கருதுகிறது—இராமனை விடுதலை செய்கிறது. ஆனால், இராமனையும் இலட்சுமணனையும் கடவுள்பேரால் சத்தியம் செய்யும்படி வழக்கு மன்றத் தலைவரே (நீதிபதி) வற்புறுத்துகிறார். பின்னர் கடவுளையே நீதிபதி நம்புவதில்லை—மக்களின் சாட்சியைக் கொண்டே வழக்கை முடிவு செய்கிறார். "இலட்சுமணனை நான் அடிக்கவில்லை" என்று இராமன் கடவுள் பேரால் சத்தியம் செய்கிறான். "இராமனே என்னை அடித்தான்" என்று இலட்சுமணனும் கடவுள் பேரால் சத்தியம் செய்கிறான். ஆனால், இருவரின் சத்தியங்களையும் நீதிபதி ஒப்புக்கொள்வதில்லை. பின்னர் ஏன் இந்தச் சத்தியம் வாங்கும் முறை கோர்ட்டுவரை சென்றுள்ளது? அங்குதான் இருக்கிறது சூட்சமம். ஆஸ்திகம் பொய், நாஸ்திகமே மெய் என்பதைச் சொல்லாமல் சொல்லி மெய்ப்பிக்கும் நிகழ்ச்சிதான் கோர்ட்டில் சத்தியம் வாங்கும் வழக்கம் என்பதை ஆஸ்திகத்தின் பாதுகாவலரான ஆச்சாரியாருக்கும் அவர்வழி நிற்போருக்கும் அறிவுறுத்த விரும்புகிறோம். இராமாயணமும் பாரதமுமன்றி வேறெதனையும்படிக்கக் கூடாதென்று கூறுமளவுக்கு 'அறிவுக் கூர்மை' பெற்ற ஆச்சாரியார் இத்தகைய அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாதென்ற போதிலும் அவருடைய வாரிசுகளாவது அறியட்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

★

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிக் கேட்டாலும், சர்க்கார் தன்னாலானதைச் செய்துகொண்டு தானிருக்கிறது, பொறுத்திருந்து பாருங்கள், மேலும் செய்யும், வீண் கிளர்ச்சி வேண்டாம், என்று பேசும் காமராஜர், இப்போது ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து, அங்கு உள்ள பஞ்ச நிலைமையைக் கண்டு பரிவுகாட்டி, சர்க்கார் உடனடியாக, போதுமான, நிவாரணம் அளிக்கவேண்டும் என்று பேசுகிறார்.

முன்பெல்லாம், சர்க்கார் சார்பில் பேசுவார் — இப்போது மக்கள் சார்பாகப் பேசுகிறார், சர்க்காருக்கு வேண்டுகோள் விடுகிறார் — எச்சரிக்கை விடவும் செய்கிறார். ஏன்? நடைபெறுவது ஆச்சாரியார் ஆட்சி! அந்த ஆட்சிக்கு காமராஜர் அறிவுறுத்தத் தொடங்கிவிட்டார்.

காமராஜரின் 'சோளுப்பொம்மைகள்' நாட்டைக் கெடுத்துவிட்டனர் என்று ஆச்சாரியார் குற்றம் சாட்டினார் — இப்போது, ஆச்சாரியார் ஆட்சியிலே, நாடு பஞ்சத்தால், தவிக்கிறது, சர்க்கார் சரியான நிவாரணம் அளிக்கவில்லை, என்று காமராஜர், இடித்துக் காட்டுகிறார்.

இந்தப் போக்கு, அக்டோபர் அரசியல் அதிர்ச்சிக்கு முன்னறிவிப்பாகும்.

பொதுவாகவே, சட்டசபை உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடலில், "என்னய்யா அற்புதம் சாதித்துவிட்டார் உங்கள் ஆச்சாரியார்?" என்று கேட்பது, சகஜமாகிவிட்டது. கேள்வி கேட்பவர், எதிர்க்கட்சியினர், என்று எண்ணுகிறீர்களா, இல்லை, இல்லை, காங்கிரஸ்காரரே, காங்கிரஸ்காரரைப் பார்த்துக் கேட்கும் கேள்வி இது. அதாவது, காங்கிரஸ் உறுப்பினர்களிலேயே, ஆச்சாரியாரை ஆதரிப்போர், ஆச்சாரியாரை எதிர்க்க இயலாத நிலையில் இருப்போர், ஆச்சாரியாரைச் சகித்துக் கொள்வோர், என்று, 'தாம்' காணக் கிடக்கிறது.

அக்டோபர் அரசியல் அதிர்ச்சியின்போது, ஆச்சாரியாரின் நண்பர்கள் தொகை மிகமிகச் சுருங்கிவிடும் என்று கூறப்படுகிறது. அதனாலேயே பக்தவத்சலம், நுழைகிறார், அவருடைய தலைமையிலே, புதிய மந்திரிசபையை அமைத்துக் கொடுத்து அகமகிழ இருக்கிறார் காமராஜர், என்று பேசப்படுகிறது —வெளிப்படையாகவே.

"தாமரை இலைத் தண்ணீர் போலிருக்கிறேன்" என்று மாணிக்கவேலர் கூறுகிறாராம்—அக்டோபரில் அவருக்கும் சீட்டு கிழிக்கப் பட்டுவிடும் என்று பேசிக் கொள்ளப்படுகிறது.

சம்மதம் தந்தால் எஸ். எஸ். ராமசாமியைக் 'கனம்' ஆக்குவதாக உள்ளனராம்.

கோவைக் 'கனம்' வெறும் உறுப்பினராகி விடுவாராம்—ஆர். வி சாமிநாதனுக்கு அமைச்சர் பதவியாம்.

இப்படிப்பல 'ஆருடங்கள்' கூறப்படுகின்றன.

சட்டசபைக்குள்ளேயே, ஆச்சாரியார் எதிரிலேயே ஒரு உறுப்பினர், ஜில்லாபோர்டு தேர்தல் சம்பந்தமான விவாதத்தின்போது, "அக்டோபருக்குப் பிறகு, ஆச்சாரியார் பதவியில் இருப்பதே சந்தேகமாமே" என்று பேசியும்விட்டார்.

ஏத்தி ஏத்தித் தொழுதனர், இவர்போல் எவர்கிடைப்பார் என்றனர், இன்று, அக்டோபரோடு உங்கள் ஆட்சி முடிகிறதாமே, என்று அவரையே கேட்கிறார்கள். ஏ! ராமா! ஏ! கிருஷ்ணா! என்ன உலகமடா இது!—என்று பாவம், ஆச்சாரியார், மனதுக்குள் எண்ணிக் கொண்டிருப்பார். என்ன செய்வது—முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது வீணுரையல்லவே.

ஆச்சாரியார் 'பட்டாபிஷேக' மானவுடன், எங்கும் 'ஜே'கோஷம், எவரும் அர்ச்சித்தனர், அவர் தரிசனம் கோரி நின்றனர். இப்போது பத்துநாட்களுக்கு முன்பு கோவையில் கூடிய காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டமொன்றில், "நாங்கள் நினைத்தால், ஆச்சாரியாரை ஒரு மணி நேரத்தில் பதவியைவிட்டு ஓட்டிவிடமுடியும்" என்று ஒரு தியாகி—நிலம் பெறுதவர்—கர்ஜனை புரிந்திருக்கிறார். ஏதோ நிலம் கிடைக்காத கோபம், அவ்விதம் பேசினர், என்று இதனைத் தள்ளிவிட்டாலும், சட்டசபை உறுப்பினர்களாக உள்ளவர்கள் இருவர், தோழர்கள் கோசல்ராம், ஆர். வி. சாமிநாதன், இருவரும் சட்டசபையிலேயே ஆச்சாரியாரைக் கண்டித்ததை, காரணமற்றது, பொருளற்றது என்று தள்ளிவிடமுடியாது. அக்டோபருக்கு நெருங்கிய தொடர்புகொண்ட 'பேச்சாளர்கள்' இருவரும்.

ஆச்சாரியார் ஆட்சி வந்தால், பஞ்சம் ஒழியும் என்றார்கள் — பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது, ஊழல் ஒழியுமென்றார்கள்—ஊழல் பெருகிவிட்டது என்று கண்டித்தனர், இருவரும்.

ஆச்சாரியாரின் அன்பர் ஒருவர், "இப்படியா முதுகில் குத்துவது?" என்று கேட்டார் — கேட்கவேண்டிய அளவுக்குக் காரம் இருந்தது, கண்டனத்தில்.

மகாபெரிய மேதை, மகான் என்றெல்லாம் பேசினீர்கள், மக்களையும் மயக்கி வைத்திருக்கிறீர்கள், அவருடைய ஆட்சியிலே, உள்ள நிலைமையின் அவலட்சணத்தை நாங்கள் வெளிப்படுத்துகிறோம் என்று இரண்டு எம். எல். ஏ., க்களே துணிந்து கிளம்பினர். இது மார்ச்சில்!

ஏப்ரல் வந்தது, எம். எல். சி. தேர்தல் நடந்தது — அக்டோபர் நெருங்கிவிட்டது—காங்கிரசுக்குள்ளேயே "துரோகிகள்" உள்ளனர், என்ற பேச்சு, அமுகுரலளவுக்குக் கிளம்பிவிட்டது. கல்கி கண்ணீர் விடும்படியான சம்பவம் நேரிட்டுவிட்டது, காங்கிரஸ் அபேட்சாக நிறுத்திவைக்கப்பட்ட யக்னேஸ்வர சர்மா எனும் பார்ப்பனர் தோற்றும் போனார். இவைகள், அக்டோபர் வருவதைக் காட்டும் அறிகுறிகள் என்றே அரசியல் வட்டாரம் கருதுகிறது.

போதுவாகப் பார்க்கும்போது, ஆச்சாரியாருக்கு ஆதரவும், நல்லுரையும், புகழ்மாலையும், காங்கிரசுக்கு வெளியே கிடைக்கும் அளவுக்குக் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளே கிடைக்கவில்லை. மகான் வந்தார்—மழைபெய்தது என்று ஆரம்பமான ஆனந்தக்களிப்பு, புயல் கண்டோம், புண்யவான் ஆட்சியிலே, என்ற சோகச்சிந்தாக மாறிவிட்டது. ஆச்சாரியார் வந்தார் பஞ்சத்தைவிரட்டுவார், என்று துவங்கிய துதி. பஞ்சம் பரவினால் பாவம் அவர் என்ன செய்வார் என்ற சோகக் குரலொலியில் வந்து முடிந்திருக்கிறது.

உண்மையாகவே, ஒருநல்லஆட்சி திறமையான , ஆட்சி — இதற்கு இருக்கவேண்டிய இலட்சணம், எவையோ, அவை, ஆச்சாரியார் ஆட்சியிலே காணக்கிடக்கின்றனவா என்று ஆராயும் எந்த நடுநிலைமையாளனும், ஆச்சாரியார் ஆட்சியைப் பாராட்ட முன்வாரான்! சிலர் பாராட்டுவர்—காரணம் பல இருக்கலாம் — காரணமின்றியும் பாராட்டக்கூடும்.

நாட்டின் நலிவுபோக்க ஆச்சாரியார் திறமையான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கைத்தறியாளர் பிரச்சினைக்கு உபசார மொழியன்றி உருவான திட்டம் காணவில்லை.

மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கான ஆய்வுரை கூடத் தந்தாரில்லை.

மத்ய சர்க்காரின் மமதையை மட்டந்தட்டும் மாவீரராக மன்றமேறிப் பேசுவார் என்றார்கள், டில்லிக்கு இவரும் அர்ச்சனைசெய்கிறாரேயன்றி மத்ய சர்க்காரின் போக்கை மாற்ற இயலவில்லை.

வேறு என்ன சாதனை காண்பித்தார்! பக்தியின் மேம்பாட்டினைப் பேசிக்கொண்டிருக்கிறாரே, இதுவா, சாதனை? இதற்கா இவர்? இவரா இதைச் செய்ய அருகர்!

தாளம் தவறுகிறது, சாரீரம் வளமிழந்துவிட்டது—என்றாலும் பாடகர், நல்லவர் என்று கூறுவது பொருளற்றதுதானே — அதுபோலவேதான், ஆச்சாரியாருக்கு வேறெந்த அரசியல் தலைவருக்கும் கிடைக்காத வசதியும் வாய்ப்பும் தரப்பட்டது-எனினும் ஆச்சாரியார் தானோ, தன்னைப் பாராட்டுபவர்களோ, மாற்றுக் கட்சியினரோ, பெருமைப்படக்கூடிய எந்தக் காரியத்தையும் சாதிக்கவில்லை. எனினும், அவரைப் புகழவேண்டுமாம்!!

இவ்வளவு பெரிய 'பூஜ்யர்' இவ்வளவு பூஜ்யபலனைத் தந்ததுபோல வேறு எடுத்துக்காட்டும் கிட்டுவது கடினம்.

'இந்து', அவருடைய இருமலிலிருந்து தும்மல் வரையிலே, விளம்பரமளிக்கிறது, தினமணி, அவருக்குத் தூந்துபியாகி நிற்கிறது, விகடன் அவருக்கு விசேஷப்படம் போட்டுப் பாராட்டுகிறது, புகழாத ஏடில்லை, கிடைக்காத ஆதரவில்லை, 'சர்'களும், ஜமீன்களும், ராஜாக்களும், அவருக்குச் சாமரம் வீசுகின்றனர்—இவ்வளவுக்கும் பிறகு அவர், மக்களுக்குத்தந்தது என்ன, என்று கணக்கெடுக்கும்போது, அவரே வெட்கப் படுவார், துக்கப் படுவார்—ஏதும் இல்லை! கஞ்சித் தொட்டிகள் திறக்கப் படுகின்றன, உடனே மூடப்படுகின்றன! புதிய வரிகள் போடப்படுகின்றன! பழய திட்டங்கள் கைவிடப்படுகின்றன. வாழ்க்கை, மக்களுக்குப் பெரும் சுமையாகி விட்டது. பட்டினிச் சாவுகள், தற்கொலைகள் போன்ற கோரக் காட்சிகள் நாட்டிலே! இவ்வளவுக்கும் இடையே, நிர்வாகத்திலே ஒரு புது முறுக்கு உண்டா? இல்லை! மேதையின் கருத்து என்று தெரியத்தக்க ஏதேனும் வாழ்வளிக்கும் திட்டம் உண்டா? இல்லை. மேலிடத்தின் தயவையாவது பெற்றதுண்டா? அதுவும் காணோம். இந்நிலையில் ஆச்சாரியார் ஆட்சியினால் மக்கள் கண்டபலன் என்ன? ஆட்சியின் தெளிவுக்கும் அறிவுக்கும் ஒரு சிறு எடுத்துக்காட்டு இந்தக்கிழமை இதழிலேயே காணக்கிடக்கிறது.

சென்னை சர்க்காரை நடத்திச் செல்லும் கட்சியினரின் புத்தி கூர்மையை, உலகிலே பல்வேறு நாடுகளும், இரவல் கேட்கும் போல் தோன்றுகிறது. அவ்வளவு 'அபாரமான' மூளைத்திறன் ததும்புகிறது.

பேச்சு, வான் முட்டுகிறது!

பிடிவாதம், வெறி அளவுக்கு இருக்கிறது!!

தொட்டது துலங்குவதில்லை! துலங்கிக் கொண்டிருப்பதைத் தொட்டால் துஞ்சி விடுகிறது!! இவ்வளவு திறமையுடன் ஆட்சியை நடத்துகிறார்கள். எதை, எப்போது, எப்படிச் செய்வது என்று தெரிந்து கொள்ளாமல், அவசரக்கோலத்தை அள்ளித் தெளித்துத் தெளித்து, பொதுமக்களுக்கு வீண் கஷ்டநஷ்டத்தை ஏற்படுத்துவதில், இப்போதுள்ள ஆளவந்தார்களுக்கு இணையே இல்லை!

இந்த இலட்சணத்தில், 'பரமபாகவதர்' தலைமை ஏற்று நடத்துகிறார், ஆட்சியை. ஆட்சியாளர்களின் தெளிவுக்கு ஒரு எடுத்துக்காட்டு!

1947-ம் ஆண்டு, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காரின் பத்திரங்களை விலை கொடுத்து வாங்கினர்.

1952-ல், இந்தப் பத்திரங்களை இந்திய சர்க்காருக்கே, திருப்பி விற்று விட்டனர்.

கைவசம் பணம் இருந்தபோது வாங்கினர்—பணம் தேவைப் பட்டதால் வாங்கினதை விற்றனர்.

இந்த வியாபாரத்திலே சென்னைக்குக் கிடைத்தது என்ன தெரியுமோ! 34½ இலட்ச ரூபாய் நஷ்டம்!!

என்ன விலை கொடுத்து வாங்கினார்களோ, அதே விலைக்காவது பத்திரங்களை இந்திய சர்க்காருக்கு விற்க வேண்டாமா—இந்திய சர்க்கார் தானே அதே பத்திரங்களைச் சென்னை சர்க்காருக்கு விற்றார்கள்—இலாபம் கூடவேண்டாம் — நஷ்டமில்லாமல் இருக்க வேண்டாமா — 34 இலட்ச ரூபாயா நஷ்டம்' ஏற்

இலங்கையில்—சி. பி. சிற்றரசு

இலங்கை திராவிட முன்னேற்ற மத்திய கழகத்தின் அழைப்பிற்கிணங்க தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஏப்ரல் 17ம் தேதி ஒரு மணிக்கு திருச்சியிலிருந்து விமானம்மூலம் ரெட்மலா விமான நிலையத்தில் வந்திறங்குவார். விமான நிலையத்தில் தி. மு. கழகத்தினரால் வரவேற்களிக்கப்படும். பிறகு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

ஏப்.	18	கொழும்பு கிளை
	19	கிராண்ட்பாஸ் கிளை ஆண்டு விழா
	21	நீர்கொழும்பு
	23	கொழும்பு மாணவ மன்ற ஆண்டு விழா
	24	மாயாவ
	25	சின்ன அந்தோனிமலை
	26	கண்டி
	28	பண்டாரவளை
	29	பதுளை
	30	தலவாக்கொல்லை
மே	2	தெஹிவளை-தென்பகுதி கிளை
	3	கொழும்பு கால்பேஸ்

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/986

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிகவலியாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 பாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சர்வநிச்சயமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச்: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN ST., கொழும்பு-11.

படுவது—பொது மக்கள் தலையிலே இப்படியா நஷ்டத்தைச் சுமத்துவது! என்ன அன்யாயம் இது, என்று கேட்டாலோ, ஒரே ஒரு பதில் தான் கிடைக்கிறது — பஜகோவிந்தம்!!

இந்தப் பஜகோவிந்தப் பாடகரின் பரிபாலனத்திலே காணப்படும் தெளிவும் அறிவும், இவ்வண்ணமிருக்கிறது. மார்வாடிகள், தாங்கள் ஐம்பது ரூபாய் விலைக்கு விற்ற சரக்கை, இருபது ரூபாய்க்கு திருப்பி வாங்கிக் கொள்வார்கள், இடையே இருந்த இளித்த வாயனுக்கு முபபது ரூபாய் நஷ்டம் ஏற்படும்—வியாபார உலகில்.

இது அரசியல் உலகிலே, அதிமேதாவியின் ஆட்சியிலேஏற்பட்ட, அறிவுத் தெளிவு! 34 இலட்ச ரூபாய் நஷ்டம்!! இந்த நஷ்டத்துக்கு யார் பொறுப்பாளி? ஏன் பொதுமக்கள் இவ்விதமான நஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும்! மிக மிகச் சாதாரணச் சம்பவம், சர்க்கார் பத்திரங்களை வாங்குவது, விற்பது—மார்க்கட்டிலே விலை மலியும் நேரமாகப் பார்த்து வாங்க வேண்டும், மார்க்கட்டில் விலைசற்று சூடாக ஏறும் நேரமாகப் பார்தது, விற்க வேண்டும். இதற்கு, அவ்வப்போது, மார்க்கட் நிலவரத்தை நாடி பிடித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சராசரி முறையைச் செம்மையாக நடத்தப் போதுமான வசதியும் வாய்ப்பும் பெற்ற சென்னை சர்க்கார், பத்திரங்களின் விலை, மார்க்கட்டிலே விழுகிற நேரமாகப் பார்த்து, கைவசம் உள்ள பத்திரங்களை விற்க வந்தது, டில்லி, தானே விற்ற பத்திரங்களை, விலையைக் குறைத்துத் தானே வாங்கிக் கொண்டது—ஆளும் அறிவாளர்கள் முகத்திலே கரியை எடுத்து அப்பிவிட்டது — பொது மக்களுக்கோ, 34 இலட்ச ரூபாய் நஷ்டம். எப்படிபபட்ட சமயத்தில்! கஞ்சித் தொட்டி திறக்கா விட்டால், கழுகு கொத்தும் பிணங்களைத் தான் காண முடியும் என்று அதிகாரிகளே கூறும்விதமாக உள்ள, பஞ்ச நிலைமை! இந்த நேரத்திலே ஏற்படுகிறது, இப்படி ஒரு நஷ்டம்.

ஆச்சாரியாருடைய ஆட்சித் திறமை பற்றி அண்டமதிரப் பேசுபவர்கள், இதற்கு என்ன சொல்கிறார்கள்? ஏன், இப்படி, இளித்த வாய்த்தனமாக இருந்து விட்டு, 34 இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.

ஏனய்யா இப்படி நஷ்டம் ஏற்படும்விதமாக விற்றீர்கள்?" என்று கேட்டால், நிதி அமைச்சர், "என்ன செய்வது! எங்கும் பணம் கிடைக்கவில்லை! அதனாலே நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று பத்திரங்களை விற்றோம்" என்கிறார். நிலைமையை மத்ய சர்க்காருக்கு எடுத்துக்கூறக் கூடாதா—கூறவில்லையா?" என்று கேட்கிறார் ஒரு உறுப்பினர், "கூறினோம் கூறாமலிருப்போமா, இனியும் கூறுவோம்!" என்று நிதி அமைச்சர் பேசுகிறார்.

சென்னையின் பேச்சுக்கு டில்லி எந்த அளவுக்குச் செவிசாய்க்கிறது என்பதை விளக்க இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

இந்த இலட்சணத்தில் இருக்கிறது இகத்தைமட்டுமல்ல, பரத்தையும் பாமரமக்களுக்கு உகந்ததாக ஆக்கித்தரும் பஜகோவிந்த ஆட்சியில், தொட்டது துலங்குவதில்லை! வெட்டி நஷ்டம்கொட்டியபடி இருக்கிறது. இந்த 34 இலட்ச ரூபாய் நஷ்டத்தைப் பொதுமக்கள் தலையில் சுமத்திய 'பாவத்தை'ப் போக்கிக்கொள்ள பரமபாகவதர் என்ன செய்யப் போகிறாரோ, தெரியவில்லை. மேதைஎன்கிறார்கள்! சாணக்கியன் என்கிறார்கள்! அவரை ஆட்டமுடியாது, அசைக்க முடியாது என்கிறார்கள்! அசகாயச்சூரர் என்கிறார்கள்! அப்படிப்பட்டவரின் ஆட்சியிலே இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்படுகிறது! ஏன்? ஏன்?

இந்தச் சம்பவத்துக்கு மட்டுமல்ல, பொதுவாகவே, ஏன் இந்த ஆட்சி? என்றே அக்டோபரில் கேட்கப்போகிறார்களாம்— காங்கிரசில் ஒரு பிரிவினர்.

அந்த 'மாற்றம்' கண்டு மனமகிழ வாரீர், என்று நாம் மக்களை அழைக்கவுமில்லை, நாம் விரும்பும் மாற்றம் அது என்று தெரிவித்துக் கொள்ளவுமில்லை. ஆனால், காங்கிரசின் எதேச்சாதிகார ஆட்சியின் வரலாற்றிலே புதியதோர் கட்டம் பிறக்க இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவே இதனை எழுத நேரிட்டது. ஆச்சாரியாரின் ஆட்சியின் அருமை பெருமை குறித்துப் பேசுபவர்கள், அவருடைய மேதையைப் பாராட்டுபவர்கள், இவர்கள் தான், ஆச்சாரியாரை அக்டோபருக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

அக்டோபர் அரசியல் அதிர்ச்சியினின்றும் ஆச்சாரியார் தப்பிப் பிழைக்கவேண்டுமானால், காமராஜரின் கூடாரத்திலே, இடம் பிடித்தாகவேண்டுமாம். எதைச் செய்வாரோ நாமறியோம். ஆனால், ஒன்று அறிவோம், ஆச்சாரியார் ஆட்சியால், ஏழை சுகப்படவில்லை, செல்வவான் புதிய செருக்கடைந்திருக்கிறான், வைதீகர்கள் புதிய முறுக்கு பெற்றிருக்கிறார்கள், ஜனநாயகம் சித்திரவதை செய்யப்பட்டுக் கிடக்கிறது. இவைகளே, ஆச்சாரியாரின் அபூர்வ சாதனைகள்—என்றேதான், அவரை இனி அகற்றிவிடுவது எளிது என்று காமராஜர் கூட்டம் கருதுகிறது. அக்டோபர் அரசியல், அதிர்ச்சி தரும் மாதமாக இருக்குமாம். பார்ப்போம்.

★

நடைபெற்றவை

விளாப்பாக்கம்:- தி. மு. க. முதலாண்டு விழா 29—3—53 மாலை தோழர் நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை மணி

தி. மு. கழக நோக்கங்களைத் தாங்கி **17-4-53** முதல் வெளிவரும்.

விவரங்களுக்கு:

மாலைமணி பதிப்பகம்,

மண்ணடி :: சென்னை-1

மறைவு

திராவிடர் இயக்கப் பணியில் நீங்காப்பற்றுக்கொண்டு பணியாற்றியவரும், சர்க்காரால் தடை செய்யப்பட்ட 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தை 5-9-48ல் தடையைமீறிக் காஞ்சித் தோழர்கள் திருவத்திபுரத்தில் நடித்தபொழுது அதன் அமைப்பாளராக இருந்து சிறை புகுந்த தோழருமான திருவத்திபுரம் ப. சு. பூங்காவனம் அவர்கள் 1—4—53ல் இரத்தக்கொதிப்பினால் மரணமடைந்தார் என்ற செய்தி நம்மை திடுக்கிடவைத்தது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கோபி தி. மு. க. செயலாளராக இருந்து பணியாற்றிவந்த தோழர் வி. பி. ராஜு அவர்கள் 31-3-53 மாலை இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்பர்களுக்கும், குடும்பத்தினர்க்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★ திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாடுகள் ★

லால்குடி பாண்டியனார் அரங்கில்

25—4—53 சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர் **அ. பொன்னம்பலனார்** | திறப்பாளர் **இராமாமிர்தத்தம்மையார்**

26-4-53 மாவட்ட இரண்டாவது தி. மு. க. மாநாடு

தலைவர் **ஈ. வி. கே. சம்பத்** | திறப்பாளர் **கே. ஏ. மதியழகன்**

சொற்பொழிவாளர்கள்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், என். வி நடராசன், இராசு—தங்கப்பழம், தில்லை—வில்லாளன், அரங்கண்ணல், தாமரைச்செல்வன், இளம்வழுதி, கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, பூங்கோதை, அருண்மொழி.

கலைக் கண்காட்சித் திறப்பாளர்

நடிப்புப்புலவர் **கே. ஆர். ராமசாமி**

கலைச் சொற்பொழிவாளர்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன்

இன்னிசை: **இசை முரசு நாகூர் அனீபா, செல்லமுத்து**

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டசபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்

இரண்டு நாட்களிலும்

அண்ணாதுரை, கருணாநிதி, கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கும்

"சந்திரோதயம்" "காதல்ஜோதி"

நாடகங்கள் நடைபெறும்.

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகம் உள்பட) ரூ. 5, 2, 1. பெண்கள் அணா 8.

டி. பி. அழகமுத்து, பொருளாளர். **எம். எஸ். மணி-ஜி பராங்குசம்,** செயலாளர்கள். **அம்பில் தர்மலிங்கம்** வ. கு. தலைவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram